# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 92/2016** **Date:26.07.2025**

**(PW1)- பீர் முகமது**

**1,3** ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு**விசாரணை**

**1.** வாசாஆ.2 ஆவணத்தை எனது ஏற்பாட்டில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான், எனது தாயார் சொல்லி செய்தேன். மேற்படி ஆவணம் எழுதும் போது எனது தாயார் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். எனது தாயார் என்னுடன் வருவதற்கு முன்னால் கோவில்பட்டியில் உள்ள எனது சகோதரியின் வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல, என்னுடன் தான் இருந்தார். வாசாஆ.2 ஆவணத்தின் உள்ள எல்கைகள் நான் தான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் முந்தைய விலையாதாரங்களில் அது இருந்தது.

**2.** முந்தைய விலையாதாரம் என்று நான் எதை குறிப்பிடுகிறேன் என்றால் எனது அம்மாவிற்கு எனது தாத்தா எழுதி கொடுத்த விலையாதாரம் ஆகும். மேற்படி முந்தைய விலையாதாரத்தின் எல்கையை தான் வாசாஆ. 2 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது அம்மா கிரயம் பெற்ற ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், எந்த ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரியாது. நான் மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் அதில் குறிப்பிட்டுள்ள எல்கையை வாசாஆ. 2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3.** பிவாசாஆ. 1 மற்றும் 2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்கைகள் சரியானதா என்றால் சரியானது தான். என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ.1, 2 ஆவணத்தில் கிழக்கு எல்கையாக பாதை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிவாசாஆ. 2 ஆவணத்தில் வடக்கு பக்கம் இடைவெளி

மற்றும் பாத்திமா பீவியின் மனையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி பாத்திமா பீவி பசீா் அகமதுவின் அம்மா என்றால் சரிதான். வாசாஆ. 2 ஆவணத்தில் வடப்பக்க எல்கையாக பசீா் அகமதுவின் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**4.** நான் வடக்கு பக்க இடைவெளியை அபகரிக்க வேண்டி அவ்வாறு பசீா் அகமதுவின் சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கிழக்கு பக்க எல்கையாக முகமது உமாள் சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்திற்கும் முகமது உமாள் சொத்திற்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் இடைவெளி கிடையாது. 1ம் பிரதிவாதி வீட்டிலிருந்து வெளியே வர வேண்டுமென்றால் எந்த திசையில் வருவாா் என்றால் கிழக்கு திசையில் வருவாா். கிழக்கு திசையில் தெரு உள்ளது என்றால் தெரு கிடையாது, அது ஒரு பாதையாகும்.

**5.** நான் மேற்படி பாதை வழியாக தான் வெளியே வர வேண்டும் என்றால் அந்த வழியும் பயன்படுத்தலாம், தெற்கு பக்கமும் வெளியே வரலாம். என்னுடைய வீட்டிற்கு கிழக்கு பக்கமும், தெற்கு பக்கமும் பாதை உள்ளது என்றால் சரியல்ல, வடக்கு பக்கமும் தெற்கு பக்கமும் பாதை உள்ளது. நான் வடக்கு பக்கம் இடைவெளியை அபகரிக்க வேண்டி 1ம் பிரதிவாதியின் வீட்டைஎல்கையாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு 5 சென்ட் சொத்து தான் உரிமை உண்டு என்றாலும் நான் 6 சென்ட் சொத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

**6.** எனது சொத்தை அளக்க வேண்டி வட்டாட்சியரிடம் மனு செய்துள்ளேனா என்றால் செய்திருந்தேன், ஆனால் பிரதிவாதிகள் அளக்க விடவில்லை. நான் தான் அளந்து நில அளவையா் தயாா் செய்த வரைப்படத்தில் கையொப்பம் செய்யவில்லையென்றாலும் மற்ற பிரதிவாதிகள் கையொப்பம் செய்தாா்கள் என்றாலும் சரியல்ல. நான் எனது அம்மா கிரயம் பெற்ற சொத்தின் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனது தாயாா் 5 சென்ட் கிரயம் பெற்ற விவரம்

தெரிந்து விடும் என்பதால் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். எனது அம்மா பிவாசாஆ. 1,2 ஆவணங்களை எழுதி கொடுத்த பின்பு எனக்கு விலையாதாரம் எழுதி தர உரிமையில்லையென்றால் சரியல்ல.

**7.** பட்டிகை சொத்து பாழடைந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ. 3 ஆவணத்தில் ரோஸ் நிறத்தில் காட்டப்பட்டுள்ள இடம் என்னுடைய 6 சென்ட் நிலத்திற்கு உட்பட்டதா என்றால் சரிதான், உட்பட்டது தான். இந்த வழக்கில் தாவாவை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் சரிதான். எனது வீட்டின் இடைவெளியை தொட்டு இடைவெளிக்கு தெற்கு பக்கம் உள்ள வீட்டில் சன்னல்கள் எத்தனை என்றால் சன்னல்கள் கிடையாது, கதவு மட்டும் உண்டு. மேற்படி கதவு தற்போதும் உள்ளதா என்றால் உள்ளது.

**8.** மேற்படி கதவு வழியாக வெளியே வந்து கிழக்கு பக்கம் உள்ள பிரதான சாலைக்கு செல்லலாம் என்றால் சரிதான், எங்கள் பாதைக்கு செல்லலாம். நான் சொல்வது போல் பிரதிவாதி வடக்கு பக்கம் இடித்திருந்தால் நான் கூறுவது போல் கதவு இருக்காது என்றால் 1ம் பிரதிவாதி எனது எல்கைக்கு உட்பட்ட துண்டு சுவரை தான் இடித்து விட்டார். இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்னுடைய சொத்தை இடிக்கவுமில்லை, அபகரிக்கவுமில்லையென்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடியாக வேண்டியது என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்